[1979 நவம்பர் 8]

இந்தச் சிலையைப் பராமரிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கிறார். அந்த வேண்டுகோள் கடிதம் மூலமாக விண்ணப்பம் செய்யப்படுமே யானால், அது பற்றிய இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி:— கட்டபொம்மன் கோட்டையைப் புதுப் பிப்பது பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. கமுதியில் கட்டபொம்மன் கோட்டை ஒன்று அழிந்த நிலையில் உள்ளது. அதைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):— உறுப்பினர் அவர்களின் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கருவேல மரம் வளர்ப்பு.

வினா எண். 149 திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா;

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பொதுப்பணித் துறை ஆயக்கட்டு ஏரிகளில் கருவேல மரம் வளர்ப்புத் திட்டம் உள்ள ஏரிகள் எத்தனை?

(ஆ) அனைத்து ஏரிகளிலும் வளர்ப்புத்திட்டம் செயல் படுத்த செயற்குறிப்பு உண்டா?

(இ) ஆமெனில் விபரம் என்ன?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):—

(அ) 106 ஏரிகள்.

(ஆ) ஆம்.

(இ) 50,000 ஹெக்டேர் பரப்பில் இதுவரை 6,500 ஹெக் டேரில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. மிகுதி உள்ள பரப்பில் (408 ஏரிகளில்) வன விரிவாக்கத் திட்டம் (Extension Forestry) மற்றும் கலப்பின (Mixed Plantations) தோட்டத் திட்டத்தின் கீழ் வருங்காலங்களில் மீதியுள்ள 408 ஏரிகளில் தோட்டங்கள் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: இதுபோன்ற பொதுப்பணித் துறை ஏரிகளில் மரங்களை வளர்த்துவிடுகிற காரணத்தால் கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே இதைக் கவனத்தில் கொண்டு கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் வேண்டுமென்பதற்காக இத்திட்டத்தை கைவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):— இத் திட்டத்தினால் ஒரு இலட்சம டன் நிறைவுள்ள மரங்கள் கிடைக்க இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தோட்டங்கள் தோற்றுவிப்பதற் கான செலவு ரூ. 16 இலட்சம் ஆகிறது. இத்திட்டத்தின் கீழ்

10,500 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 3126 ஹெக்டேர் பரப்பளவில் தோற்றுவித்த தோட்டங்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ 29,25,000 வருவாய் கிடைக்கப்பெற்றது. ஆகவே அரசாங்கத்திற்கு வருவாய் அதிகமாகக் கிடைக்கிற காரணத்தால் கால்நடைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்னை குறித்து தீவிரமாகப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

வாணிக நிலையங்கள், அலுவலகங்கள் பெயர்ப்பலகைகள்.

*வினா எண். 150 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாணிக நிலையங்கள் மற்றும் அலுவலகங்கள் பெயர் பலகையில் தமிழுக்கு முதலிடம் தரவேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):—

(அ) மற்றும் (ஆ) 1947–ம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரும் ஒவ்வொரு நிறுவனமும் அந்தந்த நிறுவனத்தின் பெயர்ப்பலகையை தமிழில் எழுத வேண்டுமெனவும் வேறு மொழிகளிலும் இருக்க வேண்டியிருந்தால் அது தமிழ்ப் பெயருக்குக்கீழ் எழுதப்பட வேண்டுமென்றும், 1948ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளுக்குத் தகுந்த திருத்தம் செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. 1. 9. 1977 முதல் திருத்தப்பெற்ற 1959–ம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் விதிகளின் விதி 42 (B)–இன்படி 1958–ம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தின் கீழ் வரும் ஒவ்வொரு நிறுவனத்தின் பெயர் பலகையையும் தமிழில் எழுத வேண்டும் என்றும் பிற மொழிகள் தமிழ் பெயருக்குக்கீழ் எழுதப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: இந்த ஆணையை மீறக் கூடியவர்கள் மீது இதுவரை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி:— (அமைச்சரின் பேரவைச் செயலர்) இந்த ஆணையை மீறியதாக எந்தவிதமான குற்றச் சாட்டுகளும் வரவில்லை. அப்படி வரும்போது இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.